பக்கங்கள் பன்னிரண்டு

விலை ரூபா: 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

லாலாவின் அதிஸ்டம்
லாலாசோப் சன்சயின்சோப் பாவிக்கும்போது ஒரு பொருள் தென்படும் அதற்கு ஒரு லேடிஸ் குடை இனாம்
லாலாசோப்
தொழிற்சாலை, அச்சுவேலி.
(கி 899)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 10 வியாழக்கிழமை (26-10-2000) தொ. பேசி 3378 ஒலி: 311

# பண்டாரவளை தடுப்பு முகாமில்
# சிங்கள இனவாதிகள் வெறியாட்டம்

★ 25 தமிழ் இளைஞர்கள் கொலை! ★ 39 பேர் காயம்

★ 20 பேரைக் காணவில்லை!!

★ 6 பேர் நிலைகவலைக்கிடம்!!!

## தலைவர்கள் கண்டனம்; விசாரணைக்கு
## ஜனாதிபதி உத்தரவு

(பண்டாரவளையிலிருந்து நமது நிருபர்)

**பண்டாரவளை பிந்துலோயா புனர்வாழ்வு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வடக்குக் கிழக்குமாகணங்களைச் சேர்ந்த 84 தமிழ் இளைஞர்களில் 25 பேர் இனவாத சிங்கள கிராம வாசிகளால் அடித்தும் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப் பட்டுள்ளனர்.**

**இச்சம்பவத்தில் 39 பேர் படுகாயமடைந்துள்ளனர் 20பேர் காணாமல் போயுள்ளனர் காயமடைந்தவர்கள் பண்டாரவளை, பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்களைக் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பண்டாரவளையில் பிந்துலோயா புனர் வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களே இவ்விதம் கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டவர்களாவர்.

இக் கொலைச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது; தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் இப் புனர் வாழ்வு நிலையத்தில் நீண்டகாலமாக சுமார் 84 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் பயிற்சி, கல்விப் பயிற்சி என்பனஅளிக்கப்பட்டு வருகிறது. இவ் இளைஞர்கள் தம்மை விடுதலைசெய்யுமாறு புனர் வாழ்வு முகாம் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்கு அதிகாரிகள் மறுப்புத் தெரிவிக்கவே அங்கிருந்த இராணுவ வீரர் ஒருவரைக் கைதியாகத் தடுத்து வைத்துக் கொண்டுதம்முடன் பேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் வரவேண்டுமென்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## படு கொலைகளுக்கு மனித உரிமை அமைப்புகள் கண்டனம்!

## தீபாவளிவாழ்த்துக்கள்



வாசகப் பெருமக்கள்
அன்பர்கள், நண்பர்கள்
வர்த்தகப் பெருமக்கள்
விளம்பர தாரர்கள்அனைவருக்கும்
ஒளிமயமான தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்

நிர்வாகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## வெள்ளவத்தையில் 7 இளைஞர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை பகுதியில் நேற்று முன் தினம் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 7 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை பஸ் நிலை

(6ம் பக்கம் பார்க்க)

## உடன் விசாரணை வேண்டும்
## டக்ளஸ் கோரிக்கை

இக்கோர கொலைச் சம்பவத்தை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அவசர அவசரமாக மந்திரி சபைகூடி இப்படுகொலை தொடர்பாகவிவாதித்தது. யாழ் எம்பியும் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, மற்றும் தமிழ் விவகார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும், தோட்டத்துறை உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்ச ஆறுமுகம்

## ஊரடங்கு இன்று தளர்வு

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உடுவில், தெல்லிப்

## உரிமை அமைப்புகள் கண்டனம்!

புனர் வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட செயலை மனித உரிமை அமைப்புக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன. இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகவும், கொலைகள் தொடர்பாகவும் பூரண விசாரணை ஒன்றை நடத்த வேண்டுமென்று ஒரே குரலில் அமைப்புக்கள் கேட்டுள்ளன. (வ)

## காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கவில்லை!

சிங்களக் கிராம இனவாதிகளால் வெட்டிக்கொல்லப் பட்டும், காயமடைந்துருள்ள தமிழ் இளைஞர்களை முன்னாள் பதுளை மாவட்ட எம்.பி.ரி.வி. சென்னன் பதுளை மற்றும் பண்டாரவளை வைத்தியசாலைகளுக்குச் சென்று பார்வையிட்டார். கடும்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்கு அங்கு எந்த விதமான சிகிச்சைகளும் அளிக்கப்படாது இரத்தம் தோய்ந்த ஆடைகளுடன் இரத்தம் வழியும் நிலையில் காணப்பட் (6ம் பக்கம் பார்க்க)

## விசாரணை கமிஷன் நியமித்து குற்றவாளியை தண்டிக்கவும்

1983ம் ஆண்டு வெலிக்கடைச் சிறையிலும் களுத்துறைச் சிறையிலும். நிகழ்ந்த கொலைகளுக்கு ஒப்பான இச்சம்பவம் இடம் பெற்றிருப்பதாக மத்திய மாகாண அமைச்சர் எஸ்.ராதாகிருஷ்ணன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். இக்கோர கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணைக்கமிஷன் அமைத்து பூரண விசாரணையொன்றை நடத்திக் குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டுமெனவும் அவர் ஜனாதிபதியைக் கோரியுள்ளார் (வ)

உட்கடமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்ச ஆறுமுகம் தொண்டமானும் விடுத்த கோரிக்கையை அடுத்தே இரு அதி உயர் இராணுவ அதிகாரிகள் (6ம் பக்கம் பார்க்க)

முன்னிட்டு உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் நித்திரையிலிருந்த பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலை

2ம்பக்கம்பார்க்க

## உலங்கு வானூர்தியின் பாகங்கள் மீட்கப்பட்டன

(திருமலை)

உப்பாறுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட எம்.ஐ 24 ரக உலங்கு வானூர்தியின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளது.

கடற்படைச் சுழியோடிகளால் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட உலங்கு வானூர்தியின் பாகங்கள் திருமலைக் கடற்படை முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது. (4)

### பலத்த பாதுகாப்பின் மத்தியில்

# திருமலை கடற்படை தளத்தினுள் கருப்புலிகள் எவ்வாறு ஊடுருவினர்?

### கடற்படை அதிகாரிகள் அதிர்ச்சி

(கொழும்பு)

திருமலைக் கடற் படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கரும்புலித் தாக்குதல் தொடர்பாக இரு தரப்பு விசாரணைகளுக்கு அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கரும்புலித்தாக்குதலில் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டும் டோறாப்படகு சேதமடைந் (6 ஆம் பக்கம பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளதழ**

## சிறுவிளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பூரட்டாதி நட்சத்திரம் 1968 ஆம் ஆண்டு பிறந்த சொந்தமாக வியாபாரம் செய்யும் மணமகனுக்கு சைவ போசன குடும்பத்தைச் சேர்ந்த ரக மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர் சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மே பா விளம்பர இல:- 116 வலம்புரி (1827)

### A/L இணைந்த கணிதம்

இணைந்தகணிதம், பௌதிகவியல் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகச்சிறப்பாக முழுப்பாடத்திட்டமும் ஏராளமானபயிற்சிகளுடன் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும் தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும் R. பாலசுப்பிரமணியம் B SC(cey) Dib-Ed 17/1பிறவுண் வீதி யாழ்ப்பாணம். (1852)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் இன்று மு.ப 10 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது எனவே உறுப்பினர்கள் இக் கூட்டத்தில்தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (வ)

## இராசி பலன்

**26-10-2000**
**(ஐப்பசி 10, வியாழன்)**
**சதுர்த்தசி பி.ப 2.41 வரை அத்தம் மு.ப 7.54 வரை ராகுகாலம் 1.33-3.03 சுபநேரம் 7.33-9.03 சித்தம், தீபாவளி**

★ மேடம்

கவலை நீங்கும், எதிரிகளால் நன்மை, தனவரவு, முயற்சி பலிதம்.

★ இடபம்

சிறுவியாதி, மன அமைதியின்மை, முயற்சி தடங்கல்.

★ மிதுனம்

தாய் வழி உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், காரிய ஜெயம்.

★ கடகம்

சகோதரர் உதவி, சந்தோசமான செய்தி, பணவரவு, புதிய பொருள் சேர்க்கை.

★ சிங்கம்

## செய்தித்துளிகள்

### திருடர்கள் அட்டகாசம்

[ஈச்சமோட்டை]

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றில் வீட்டு முன்றலில் நிறுத்தப்பட்டிருந்த காரிலுள்ள வானொலிப் பெட்டியைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளார்கள்.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. [செ-59]

### வடமராட்சியில் நீர்வியோநிகம்இல்லை

[வடமராட்சிகிழக்கு]

வடமராட்சி பகுதி மிவை கிராமங்களுக்கு குடிநீர் விதியோகம் தற்போது மேற்கொள்ளப்படாமையால் பெரும் அவதி நிலைக் குள்ளாவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நடைபெற்ற முடிந்த தேர்தலிற்கு முன்பு இப்பகுதிக்கு குடி நீர் விதியோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தற்போது நிறுத்தப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க-43]

### தபாலகம் இடம்பெயர்வு

(கல்வயல்)

எழுதுமட்டுவாள் உபதபாலகம் யுத்த அனர்த்தத்தையடுத்து பருத்தித்துறை பழைய சந்தைப் பகுதி மருதடியிலுள்ள கட்டடத்தில் இயங்குவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு முன்னர் இவ்விடத்தில் மருதடி உபதபாலகம் இயங்கியது.

தற்போது மருதடி தபாலகம் முன்னால் உள்ள கட்டடத்தில் இயங்கிவருகிறது. (க)

### கடும் கண்டனம்

யாழ்.சுதந்திர ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையானது சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும் என கண்டி மாவட்ட சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தலைவர் யே. ஏ ஜயசிங்க விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது நிமலராஜனின் கொலைக்கு

### அரைஇறுதி ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஞானப்பிரகாசர் விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ்-மாவட்டத் தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின்அரை இறுதி ஆட்டங்கள்இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

நவாலி தென்றல் வி.கழகமும், கோண்டாவில் மறுமலர்ச்சி வி. கழகம் இன்றும் மல்வம் ஞானப்பிரகாசர் வி. கழகமும் இணுவில் அண்ணா வி.கழகம் நாளையும் விளையாடுகின்றன.

இவ்விரண்டு போட்டி களிலும் வெற்றி பெறும் இரு கழகங்களுக்கிடையேயும் இறுதிப் போட்டி 2000.10 29ம்திகதி இடம் பெறவிருக்கின்றது. அரையிறுதி ஆட்டங்கள் பிற்பகல் 4.00 மணிக்கும், இறுதிப் போட்டி பிற்பகல் 3.30மணிக்கும் ஆரம்பமாகும் (வ)

### விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விவசாயத் துறையில் பட்டம் பெற்றவர்கள் ஒக்டோபர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னதாக ''அரசாங்க அதிபர்'' மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்பதவிக்குஒர் வெற்றிடம் மாத்திரமேஉள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கேட்டுள்ளார். (செ)

### தபால்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

வெளியூர்த் தபால்கள் அடங்கிய 163 பொதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளது,

இதேவேளையில் யாழ். குடாவில் இருந்து வெளிநாடு மற்றும் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படவேண்டிய தபால்கள் அடங்கிய 79 தபால் பொதிகள் அக்கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விமானம்

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்தும், ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையக்கோரியும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். (வ)


## வாழ்த்துகின்றோம்

அருட் சகோதரர்

**ஏன்சிலி றொசான்**

அவர்கள்

இறைபணியில் ''திபாகக்கோன்'' பட்டத்தை பெறும் வேளையில் தொடர்ந்தும் கடவுள் பணியில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**ஆசை மம்மி, ஆசை அங்கிள், றெரியண்ணா குடும்பத்தினர், பெரியக்கா குடும்பத்தினர், சின்னக்கா குடும்பத்தினர். ஆசையண்ணா குடும்பத்தினர், சின்னண்ணாகுடும்பத்தினர் குட்டியண்ணாகுடும்பத்தினர்.**

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (கி-976)

## வாழ்த்துகின்றோம்

தரம் - 5 புலமைப் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்ற கட்டுடை சைவ வித்தியாசாலை மாணவன்,

★ சற்குணநாதன் விதூஷன் ★

என்பவரை வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர்கள்
**சுதா அக்கா**
**அம்மம்மா**

கட்டுடை,
மானிப்பாய். (கி975)

தீபாவளியை முன்னிட்டு

**லஷ்சுமி திரையில்**

(இணுவில்)

**புதன் (25.10.2000) முதல் ரீல்ஸ் காட்சிகள்**
எமது ரசிகர்களுக்கு தீபாவளி பரிசாக
**விஜய், குஷ்பு, ரம்பா, மணிவண்ணன் நடித்த**

**மின்சார கண்ணா (ரீல்ஸ்)**

தினசரி 10:30, 2:30 (புதிய நேரம்)

அன்பு ரசிகர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள் (கி-967)

யாழ்ப்பாணம்
போதனா வைத்தியசாலை

★ சிங்கம்

வாக்குக் கலகம், காரிய, நன்மை, மதிப்புக் குறைவு தனவிரயம்.

★ கன்னி

புத்தாடைகள் கிடைத்தல், சயன சுகம், புதிய உணவு, ஆரோக்கியம்.

★ துலாம்

காரியத் தடை, பிரயாணம், நித்திரைக் குறைவு, சுபசெலவு.

★ விருச்சிகம்

உறவினர் சந்திப்பு, பண வரவு, சந்தோச மிகுதி, கௌரவம்.

★ தனுசு

மற்றவர்கள் கீழ்படிவர். தொழில் மேன்மை, முயற்சிகள் கை கூடும்.

★ மகரம்

பிரயாணம், காரியஜெயம், மனக்கிலேசம், கட்டுப்பாடு.

★ கும்பம்

சத்துருக்களால்தொல்லை, பிரயாண பயம், உடல் உபாதை, மனக்கிலேசம்.

★ மீனம்

விருந்துபசாரம், தனலாபம், வாகன வசதி, கௌரவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

பட்டிருப்பதாவது நிமலராஜனின் கொலைக்கு காரண கர்த்தாக்களை உடனடியாக கண்டறிந்து தண்டனை வழங்க அரசு முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (க-5)

## காலைநேர சந்தை

(கல்வயல்)

கரவெட்டிப் பகுதியில் தற்போது காலை நேரத்திலும் சந்தை கூடுகிறது.

இச் சந்தையானது முன்னர் விளக்கு வைத்தசந்தை என்ற சிறப்புடன் இரவில் மட்டும் இயங்கி வந்தது.

பின்பு யுத்த சூழ்நிலைகாரணமாக மாலை நேரச் சந்தையாக இயங்கி வந்தது.

தற்போது பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து இப் பகுதியில் வாழ்வதன் காரணமாக காலையிலும் அதன் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இதனை நிர்வகித்து வரும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை அச் சந்தையை சுற்றி முட்கம்பிகளை அமைத்து செப்பனிட்டுள்ளது இரண்டு இறைச்சிக்கடைகளும். அழகுசாதன பொருட்களின் விற்பனை நிலையங்களும், தற்காலிக கடைகளும் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. (த-111)

டுள்ளது.

இதேவேளை விமானம் மூலம் இடம்பெறும் தபாலக சேவை தொடர்ந்தும் சீராக இயங்கி வருவதாக தபால் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-12)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு இளைஞர் கழகம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் கழகத்தலைவர் இ. சாந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வலி–மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ந – 2)

---

## ஷெல் வீச்சில்,..

யில் யாழ்-போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எஸ்.சௌசல்யா(வயது-32 என்பவரே காயமடைந்தவராவார்.

இவரது வீடும் பலத்சேதமடைந்துள்ளமைஇங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)


யாழ்ப்பாணம்

போதனா வைத்தியசாலை

நோயாளர்

பராமரிப்பு சேவைக்கு

## ஆட்சேர்ப்பு

யாழ் போதனா வைத்தியசாலையில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்சால் நடாத்தப்பட்டுவரும் நோயாளர் பராமரிப்பு சேவைக்கு பின்வரும் தொண்டர் சேவையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை 28-10-2000 அன்று காலை 9 மணிக்கு யாழ் போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு வாசலிற்கு அருகாமையில் அமைந்துள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்பு காரியாலயத்தில் நடைபெற உள்ளது. கொடுப்பனவு' விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்,

1 நோயாளர் பராமரிப்பாளர்

2 ஆங்கில தட்டெழுத்தாளர்

3 கணக்குப் பதிவாளர்

நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிப்பவர்கள் கீழ்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்கவும். நற்சான்றுப் பத்திரம், கல்வி மற்றும் முன் அனுபவத்திற்கான சான்றிதழ்

மாவட்ட ஆணையாளர்
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்
மாவட்ட தலைமையகம்,
யாழ் தெற்கு, கொக்குவில்.

நோயாளர் பராமரிப்பு சேவை,
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்
யாழ் போதனா வைத்தியசாலை

## இன்று ஒரு தகவல்

### நாட்டு மனிதனின் பண்பைவிட காட்டு மிருகம் மேலானதா

அடர்ந்ததோர் காடு அந்தக் காட்டின் பாலை மரம் ஒன்றில் சிட்டுக் குருவி தம்பதி ஒன்று கூடு கட்டிக் குடியிருந்து வந்தன. யாருடைய குறுக்கீடுமில்லாது அவை குதூகலமாகக் கூடிக் களித்திருந்தன. சுதந்திரமாக அவை எங்கும் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன.

பெண் சிட்டுக்கு முட்டையிடும் காலம் வந்தது. பொரிக்கப்போகும் தன்குஞ்சுகளுக்கு காட்டில் தகுந்த பாதுகாப்புக் கிடைக்குமா என சந்தேகப்பட்டது. மனிதர்கள் வாழ்ந்திருக்கும் காட்டில் தகுந்த பாதுகாப்புக் கிடைக்குமா என சந்தேகப்பட்டது. மனிதர்கள் வாழ்ந்திருக்கும் காட்டில் தமக்குத் தகுந்த பாதுகாப்புக் கிடைக்கும் என்று அது நம்பியது. அதனால் ஆண் சிட்டிடம் 'நாங்கள் மனிதர்கள் வாழ்ந்து வரும் இடம் நோக்கிப் போவோம் அங்கு போய் கூடுகட்டி முட்டை இடலாம் என்றது.

ஆண் சிட்டுப் பெண் சிட்டின் எண்ணத்திற்கு உடன்பட மறுத்தது. ''மனிதரை மனிதரே வாழ விடுகிறார்கள் இல்லை. நீயானால் மனிதருடன் போய் வாழலாம் என்கிறாயே'' என்று பெண் சிட்டிடம் கவலையுடன் கூறியது.

பெண்குருவியோ தன் எண்ணத்தில் விடாப்பிடியாக நின்றது. அதனால் குருவித் தம்பதிகள் மனிதர்கள்வாழ்ந்திருக்கும் பகுதியை நோக்கிப் பறந்தன. பல இடமும் சுற்றிப் பார்த்து தாம் வாழ்வதற்குரிய இடத்தை தேர்ந்தெடுத்தன.

அவ்விடம் மனிதர்கள் வாழ்ந்திருந்ததோர் வீட்டின் முற்றத்து மல்லிகைப் பந்தலாகும். அதற்குள் மறைவாக தமது கூட்டினை அவை அமைத்துக்கொண்டன. மனிதர்கள் வாழும் பகுதி என்பதால் தனது குஞ்சுகளுக்கு வேறு உயிரினங்களால் ஆபத்து நேராது என பெண் சிட்டு திடமாக நம்பியது.

உரிய காலம் வந்ததும் பெண் குருவி நான்கு சிறிய முட்டைகளை தன் கூட்டுக்குள் இட்டது. தனது சிறிய இரண்டு உருண்டை விழிகளையும் கொட்டுக், கொட்டென விழித்துக் கொண்டு இரவுபகலாக முட்டைகளை அடைகாத்தது. ஆண்குருவி பெண் குருவிக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தது.

நான்கு குஞ்சுகள் சரியான சமயத்தில் வெளிவந்தன. அன்புடன் அவற்றின் சிறகுகளை சிட்டு தாயும், தந்தையும் கோதிக்கொடுத்தன.

அந்தமனிதர் வீட்டுப்பூனை ஒருநாள் மல்லிகைப்பந்தலுக்குள் ஏதோ இருப்பதைக் கண்டுகொண்டது.

பூனையைக்கண்ட சிட்டுக் குருவிகள் 'கீச்' 'கீச்' என்று கத்தின அதன் சத்தம்கேட்டு வெளியேவந்த வீட்டுமனிதர் மல்லிகைப்பந்தலுக்கு ள் தன் கையைவிட்டு ஆராய்ந்தார். அவர் கையில் குருவிக் கூடு அகப்பட்டது. அதை அப்படியே வெளியேஎடுத்தார். அதற்குள் பட்டுப்போல் 4 குஞ்சுகள் படுத்திருப்பதைப் பார்த்தார். சிறிதும் இரக்கமில்லாமல் கூட்டைப்பிரித்து அவற்றை தன் பூனைக்கு முன்னே விட்டெறிந்தார்.

தங்கள் கண்முன்னாலேயே தம் செல்லக் குஞ்சுகள் பூனைக்கு இரையாவதைக் கண்டு சிட்டுக்குருவிகள் திடுக்கிட்டுப் போயின. நெஞ்சம் பதற அலறித் துடிதுடித்தன.

ஈற்றில் இரக்கமற்ற மனிதர்கள் வாழ்ந்திருக்கும் நாட்டிலும் பார்க்க கொடியவிலங்குகள் வாழ்ந்திருக்கும் காடு எவ்வளவு மேலானது என்று அவை தமக்குள்தாமே முடிவு எடுத்துக்கொண்டன. மீண்டும் கூடுகட்டிக் குஞ்சு பொரிக்கும்எண்ணத்துடன்சென்றன.

அச் சிட்டுக்களே வாழ முடியா இந்நாட்டில் நாம் எம்மாத்திரம்.

- சந்திரா தனபாலசிங்கம்

## அல்லல் அகன்று அமைதி நிலவிட இன்றைய தினத்தில் பிரார்த்திப்போம்

### மட்டு. பா. உறுப்பினர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வடகிழக்கு மண்ணில் தொடருகின்ற போரினால் தினமும் அவலங்களைச் சுமந்து, ஆனந்தத்தை தொலைத்து வாழுகின்ற தமிழ் மக்களின் வாழ்க்கையில் நிலையான அமைதியும், நிம்மதியும் மலருகின்ற நாளாக தீபத்திருநாள் அமைய பிரார்த்தனை செய்ய வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சோ.கணேசமூர்த்தி வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு இக்கட்டான கால கட்டம். யுத்தம் தமிழ் மக்களை அமைதியான வாழ்க்கைச் சூழலிலிருந்து நீண்ட தூரம் புறந்தள்ளி விட்டுள்ளது. இதனால் அவர்கள் அனுபவிக்கும் வேதனைகளுக்கு அளவேகிடையாது.

புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது தீபாவளித் திருநாளாவது அமைதியும், சமாதானமும் மிக்க தொரு தேசத்தை உருவாக்க வேண்டும். அதற்காக பிரார்த்திக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார். [க-60[

## முக்கிய கலந்துரையாடல்

(இணுவில்)

சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு 2000 ஆம் ஆண்டு தோற்றும் மாணவர்களுக்கான கலந்துடையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (த-49)

## ஞானச்சுடர் மாதவெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10. 30 மணிக்கு ஐப்பசிமாத ''ஞானச்சுடர் மாத இதழ்'' வெளியிடப் படவுள்ளது.

இதழின் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் க.கணபதிப்பிள்ளையும், மதிப்புரையை வடமாரட்சி மகளிர் கல்லூரி ஆசிரியர் க. நவரெத்தினமும் வழங்குவுள்ளார்கள். (செ)

## 6 இலட்சம் பணம் கொள்ளை

(கொழும்பு)

வத்தளைப் பிரதேச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலிருந்து இனம் தெரியாத கோஷ்டியினரால் 6லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

வங்கியில் வைப்பிலிடுவதற்றாகக வைக்கப்பட்டிருந்த பணமே இனம் தெரியாத நான்கு பேர் கொண்ட கோஷ்டியினரால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இந்த கொள்ளையில் ஈடு

## பெந்தோட்டை பகுதியில் இரு நபர்கள் கைது

(கொழும்பு)

பெந்தோட்டப் பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இருசந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள் என்றும் இவர்களிடமிருந்து ரீ-56-7ரக துப்பாக்கிஒன்றும் 53 தோட்டாக்களும், ஒரு கைக்குண்டும் மற்றும் ஆயுதங்களும் மீட்க்கப்பட்டதுடன் தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இவர்கள் பயன்படுத்திவந்த இரண்டு ஆட்டோக்களும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. (க-05)

## மத்திய மாகாணத்தில் ஆசிரியர் நியமனம்

### பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்தியமாகாணத்தில்உள்ள ஆசிரியர்களிற்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக ஹற்றன் வலயக்கல்விப் பணிப்பாளர் எம். ரங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்தசெப்ரெம்பர் மாதம் நட.த்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின்படி 15 பாடங்களுக்கான ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்.

50 ஆசிரியர்கள் வெற்றிடங்கள் தற்போது நிரப்பப் படவுள்ளன.

ஆயினும் 150 ஆசிரியர்கள் வெற்றிடங்கள் இங்குள்ளன. அவை வெகுவிரைவில் நிரப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு அடையாள அட்டைகள்

(சங்கானை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் தொழில் புரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு தொழில் அடையாள அட்டைகள் வழங்கப் படவுள்ளன.

மேற்படி உத்தியோகத்தர்கள் புகைப்படங்கள், மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலகங்களூடாக அதிகார சபையின் அடையாள அட்டை ஊடகப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு சமுர்த்தி அதிகார சபைப்பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (த-24)

## ஊர்காவற்றுறையில் கெயர் நிறுவனத்தினால் விவசாயிகளுக்குப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்

பாதுகாப்பு வீட்டுத்தோட்டப் பயிற்சிக்கான விரிவுரைகளை வழங்குகின்றார்.

## ஐ. தே. க. முன்னாள்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட புளியங்கூடலில் கெயர் நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு உணவுப்பாதுகாப்பு, வீட்டுத்தோட்டப் பயிற்சி ஆகியன வழங்கப்பட்டு வருகின்றது.

கெயர் நிறுவனத்தின் தீவக இணைப்பாளரும் வெளிக்கள உத்தியோகத்தருமான க.இராசலிங்கம் உணவுப் ... டப் பயிற்சிக்கான விரிவுரைகளை வழங்குகின்றார்.

மேற்படி பயிற்சிக்குதெரிவு செய்யப்பட்ட 30 விவசாயிகளுக்கு 3 கட்டமாக நடைபெற்று வருகின்றது.

இப் பயிற்சி முடிவில் இவ் விவசாயிகளுக்கு விதைகள், விவசாய உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

... யிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இந்த கொள்ளையில் ஈடுபட்டவர்கள் சிறையிலிருந்து தப்பிச் சென்ற மூன்று நபர்களும், இராணுவத்திலிருந்து தப்பி ஓடியசிப்பாய் ஒருவரும் என்று சந்தேகிக்கப்படுவதாகவும்.புலனாய்வுத்தகள் தெரிவிக்கின்றன.

(க-05)

### பயிற்சி மொழிபெயர்ப்பாளராக

# நியமிக்கப்பட்டோருக்கு விசேட பரீட்சை

(கொழும்பு)

அரச கரும மொழி திணைக்களத்தினூடாக 1999 ஆண்டு மே,ஓகஸ்ட் மாதத்தில் மொழி பெயர்ப்பாளராக நியமனம் பெற்ற பயிற்சியாளர் அனைவரும் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள பரீட்சை ஒன்றுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி 9.00 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ளதாக திணைக்கள ஆணையாளர் எஸ்.என்.பத்திரகே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்,அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, பொலநறுவை,பதுளை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலும், ஏனையோருக்கு இராஜகிரியவில் அமைந்துள்ள அரச கரும மொழி திணைக்களத்திலும் நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை மொழிபெயர்ப்பாளர்களின் எதிர்கால பயிற்சிக்கு திட்டமிடும் நோக்குடனேயே நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

### பத்ததி வணக்கமுறை கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

இந்து சமய அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடுசெய்துள்ள பத்ததி வணக்கமுறை மந்திர வழக்குகள் எனும் தொனிப் பொருளிலான ஒரு நாள் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29-10-2000)மட்டக்களப்பு மாவட்ட செயலககலாசாரப் பகுதியின் அனுசரணையுடன் கல்லடி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட கலாசாரஅதிகாரி செல்வி தங்கேஸ்வரி கதிராமன் தலைமையில் நடைபெறும்இக்கருத்தரங்கில்கிழக்குப்பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.மௌனகுரு விரிவுரை நிகழ்த்தவுள்ளார்.

(க-60)

# ஐ. தே. க. முன்னாள் பா.உறுப்பினர் நீதிமன்றில்

(கொழும்பு)

நிவித்திகல பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் காமினி அத்துகோறள உட்பட நால்வர் மாவட்ட நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் திலக்மாறக்தன, நிஸங்க நாணையக்கார ஆகியோர் முன்நிலையில் இவர்கள் ஆஜராகியுள்ளனர்.

குறிப்பிட்ட இந்த சந்தேக நபர்கள் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் மீண்டும் இந்த வழக்கு எதிர்வரும் 5ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

(க-05)

# பிரபல வர்த்தகர் கொழும்பில்சுட்டுக்கொலை

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியின் 4ஆம் குறுக்குத் தெருவில் வைத்து பிரபல வெளிநாட்டு பழ இறக்குமதியாளர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இனம் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட இக்கொலை சம்பவத்திற்கு வர்த்தகப் போட்டியே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாணந்துறையைச் சேர்ந்த பிரஸ்தாப நபரை சுட்டுவிட்டு இரு நபர்கள் தப்பியோடியுள்ளதாக புறக்கோட்டை காவல்துறை அதிகாரி மகாநாம கருணரத்தின தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும்நடைபெறுவதாக பொலிஸ் வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

(த)

# சீனாவின் விருப்பத்தைப் புரியாது அமெரிக்கா தலையிடுகிறது

## வெளியுறவு அதிகாரி தகவல்

(பிஜிங்)

அமெரிக்க நாடாளுமன்றம் சீனாவின் உறுதியான இதயத்தைப் புரிந்து கொள்ளவில்லை யென்று சீனா வெளியுறவு அதிகாரி சுங்பாசோ தெரிவித்தார்.

அவர் பத்திரிகையாளர்களிடம் மேலும் பேசுகையில்; தாய்வான் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அமைப்புகளில் சேருவதை அமெரிக்காவின் பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளதரகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில்; இத் தீர்மானம் சீனாவின் அரசுரிமையைப் பாதிக்கிறதென்றும் சீனாவின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாகக் கருதப்படும் என்றும்இது அமெரிக்காவின் முரட்டுத்தனமான தலையீடு என்றும் தெரிவித்தார்.

இது குறித்து சீனா தனது உறுதியான எதிர்ப்பைத் தெரிவிப்பதாக சுங்பாசோ தெரிவித்தார். (து)

# பாலியல் ரீதியான வழக்குகளே சீனாவில் அதிகமாம்

## சட்டத்தரணிகள் சங்கம் கவலை

(பீஜிங்)

சீனாவில் இடம் பெறும் வழக்குகளில் பெரும்பாலானவை பாலியல் ரீதியான வழக்குகளே என்றும்ஷங்காய் பகுதியிலேயே இவ்வறான வழக்குகள் அதிகமாக இடம் பெற்றுவருவதாக அப்பகுதி சட்டத்தரணிகள் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

சீனாவில் இவ் உறவுகள் மலிந்துள்ளதற்குக் காரணம் கவர்ச்சிமிகு விளம்பரங்கள் மற்றும் கீழ்த்தர திரைப் படங்கள் என்றும் சீனப்பத்திரிகை யொன்று புள்ளி விபரங்களுடன் வெளியிட்டிருக்கிறது.

பத்திரிகைகளும் பொதுமக்களும் சட்டத்தரணிகளும் இந்த ஒழுக்கமுறைகளை அடிக்கடி சாடிவருவதுடன் நாடாளுமன்றத்திலும் சட்டம் கொண்டுவர வேண்டுமென்றும்நெருக்கடிகள்வலுக்கின்றன.

சீனாவில் இருந்துவரும் இருதார மண முறைபற்றி மீளாய்வு செய்ய சட்டத்தரணிகளுடன்அரசு அலோசித்துவருதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சட்ட மூலம் உணர்வுக் குற்றங்களைத் தடுப்பதால் பொருளாதார மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை யென்று ஒருசாரார் கருத்துத் தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(து(

## புது உறவு மூலம் இணையும் சிங்கப்பூர் இந்தியா

(சென்னை)

சிங்கப்பூருக்கும் இந்தியாவிற்கும் இடையில் கடலுக்கடியில் தொலை தொடர்பு அமைக்க 65 கோடி செலவிடப்பட இருக்கிறது.

சிங்கப்பூர் சென்னை, மும்பை ஆகிய நகரங்களை இணைக்கும் கண்ணாடி இழையிலான தொலை தொடர்பு சேவைகள் அமைக்கப்படவுள்ளது.

சிங்கப்பூர் தொலைத் தொடர்பு நிறுவனமும் இந்திய நிறுவனமும் இணைந்து இந்த வேலையை தொடங்க இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# ரயில்- வான் மோதல் இருவர் பலி; மூவர் காயம்

(சென்னை)

ரயில் கடவையைக் கடக்க முயன்ற வானை ரயில் வண்டி மோதியதில் அவ்வாகனத்தில் பயணம் செய்த இருவர் பலியாகிய துடன், மூவர் படுகாயமடைந்த சம்பவம் புதுக் கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

புதுக்கோட்டை மாவட்டம் புசைத்துறை அருகே வெள்ளாற்றுப் பாதையில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் திருச்சியிலிருந்து ராமேஸ்வரம் சென்று கொண்டிருந்த ரயில் வான் ஒன்றுடன் மோதியதில் இவ்வுயிர்ச் சேதம் ஏற்பட்டது.

விபத்துக்குள்ளான வானை ரயில் ஒருமைல் தூரம் வரை இழுத்துச் சென்றதை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இக் கோரவிபத்தில் மூவர் தப்பியது பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கும் செயலாகக் கருதப்படுகிறது. (து)

## உலக தரிசனம்

# வேறுபட்ட நாகரிகங்களில்

# தகராறு ஏற்படுத்திய போர்த்தேங்காய்

(அரியாலை)

பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டு தற்பொழுது பந்தயம்வைத்து விளையாடப்படுகின்றது.

அண்மையில் உடுவில் வடக்கு அம்பலவாணர் வீதி காளிகோவிலடி முன்றலில் ஆயிரம் ரூபாய்பந்தயத்திற்கு இவ்விளையாட்டு விளையாடப்பட்டது.

பெருந்திரளான மக்கள் திரண்டு நின்று இவ் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் போட்டி முடிவுறும் தறுவாயில் இருஅணியினருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டமையால் போட்டி இடையில் குழம்பியதாம். (செ-106)

தேசிய அரசு அமையாவிட்டால்

# சிறுபான்மை உதவியை நாட நேரிடலாம்

[கொழும்பு]

தேசிய அரசு அமையாவிடில் சிறுபான்மையினர் கேட்பதை எல்லாம் வழங்கும் நிலை ஏற்படும் என அஸ்கிரிய மகாநாயக்கர், அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல விடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து தேசிய அரசு அமைப்பது தொடர்பாக சிறுபான்மையினர் மத்தியில் அச்சமும் பீதியும் நிலவி வருகின்ற இவ் வேளையில் இனவாதரீதியில் மகாநாயக்க தேரர்கள் தேசிய அரசு அமைப்பதற்கு முனைப்பாக நிற்பது சிறுபான்மையினர் மீதான வக்கிர உணர்வின் வெளிப்பாடு எனவும் அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். [க-செ]

# யாழ். செயலகத்தில் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

மாதாந்த உணவு விநியோகம்,மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு, யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல பல.நோ.கூ.சங்கத்தின் தலைவர்கள்,பொது முகாமையாளர்கள்,கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் , பெற்றோலியக் கூட்டுத்தாபன பொறுப்பதிகாரிகள்,யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அர்சாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். [செ[

# நெருந்தீவில் 14மாணவருக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கோட்டத்திலுள்ள வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் முகமாக ஜனாதிபதி சந்திரிகாவினால் மேற்கொள்ளப்படும் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 14 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 2500 ரூபா பெறுமதியான காசோலைகளை கடந்த 21 ஆம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (க-4-82)

## விசேட அர்ச்சனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துசமயப் பேரவை இன்று தீபாவளி தினத்தை முன்னிட்டு சுன்னாகம் ஸ்ரீகதிரமலைச் சிவன் கோவிலில் காலை 6மணி தொடக்கம் பி.ப 1மணி வரை விசேட பஞ்சமுக அர்ச்சனைகளும், பிராத்தனை உரைகளும்

## உதைப் பந்தாட்ட போட்டிகள் ஆரம்பம்

(சுண்டுக்குளி)

# வேறுபட்ட நாகரிகங்களில் சமநோக்கு காண வேண்டும்

## சீன அமைச்சர் உரை

[பீஜிங்]

வேறுபட்ட நாகரிகங்களுக்கும் பண்பாடுகளுக்கும் இடையே சமநோக்கைக் காண முயற்சிக்க வேண்டும் என்று சீனப்பண்பாட்டுத் துறை அமைச்சர் சுன்ஜாசிங் தெரிவித்தார்.

புதிய நூற்றாண்டின் சீன, ஆபிரிக்கநாடுகளின் பண்பாடு என்ற கருத்தரங்கு நேற்று முன்தினம் சீனாவில் ஆரம்பமான தொடக்கவிழாவின் போது சீன அமைச்சர் சுன்ஜாசிங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எகிப்து, கென்யா, நைஜீரியா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் உயர் அதிகாரிகளும் சீன அறிவியல், பண்பாடு, ஆகிய துறைகளின் அதிகாரிகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மகாநாட்டில் கலாசாரப் பரிவர்த்தனைக்குரிய அம்சங்கள் ஆராயப்பட்டன வென்று இது ஆபிரிக்க நாடுகளுக்கும் சீனாவிற்கும் பயனுள்ளதாக அமைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. [து]

# நாளைக்குள் புதிய அரசாங்கம் இஸ்ரேலில் அமைக்க முயற்சி

(ரெல்அவில்)

இன்று அல்லது நாளை இஸ்ரேல் அவசரகால அரசாங்கம்அமைக்க துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது விடயம் தொடர்பாக இஸ்ரேல் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நந்தன் யாகூ துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகமாகத்தான் இணைந்து அரசு அமைக்க முடியுமென்றும் நாட்டைப் பலஸ்தீனர்களுக்கு விற்று விடுவார்கள் என்பதற்காகவே இணைய வேண்டி இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

இதேவேளை எதிர் கட்சியினர் சேர்ந்து அரசு அமைப்பதால் மேற்காசிய சமாதானத்துக்கும் பங்கம் ஏற்படுமென்றும் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். (க-து)

---

பஞ்சமுக அர்ச்சனைகளும், பிராத்தனை உரைகளும் நடைபெறவுள்ளது.

இப்பிராத்தனை உரைகளை நல்லைஆதீனமுதல்வர் மற்றும்அருட்கவி சீ.வினாசித்தம்பி, ஆ.மகாலிங்கம், திருமதி மங்கையக்கரசி திருச்சிற்றம்பலம், கலா வினோதன் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர். (த)

## முதலாம் ஆண்டு விழா

(சங்கானை)

சங்கானை மேற்கு நிற்சாம ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் முதலாம் ஆண்டு விழா இன்று 26 ம் திகதி சரஸ்வதி சனசமூக நிலைய மன்றலில் நடைபெறும்.

இதேவேளையில் சில மாதத்திற்கு முன்பு ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட மாபெரும் மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய விராங்கனைகளுக்கு பாராட்டி, கௌரவித்து பரிசில்களும் வழங்கப்பட்டது. (க-ப-16)

---

## போட்டிகள் ஆரம்பம்

(சுண்டுக்குளி)

யாழ் கல்லூரி அணிகளுக்கிடையில் 3 ஆம் தவணையின் போது வருடா வருடம் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரிமைதானத்தில் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணிக்குமிடையே இடம் பெற்ற முதலாம் பிரிவுக்கான ஆட்டத்தில் யாழ். கல்லூரி அணி இரண்டுக்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி அணியை தோற்கடித்துள்ளது. (க. 4-110)

## விமான குண்டு வீச்சு

(வடமராட்சி)

வடமராட்சி நாகர் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணியளவில் 'மிக்' ரக குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற் கொண்டன.

இப் பகுதியில் பெரும் புகை மண்டலம் கிளம்புவதாக நேரில்கண்டோர் தெரிவித்துள்ளனர். (க-43)

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு
குறள்

வலம்புரி

## ஒளி ஏற்றுவோம்

உலகெங்கணுமுள்ள இந்துக்கள் இன்று தீபாவளித் திருநாளை கொண்டாடுகிறார்கள். ஆணவ இருள் மறைந்து எங்கும் ஒளிமயம் ஏற்படுவதை நினைவுபடுத்துவதே இத்திருநாளின் பொருளாகும். எங்கும் எதிலும் ஒளிமயம் ஏற்பட வேண்டுமாயின் அங்கு பசி-பட்டினி—வறுமை ஒழியவேண்டும். எல்லோரையும் சமகண்கொண்டு பார்க்கும் பக்குவ நிலை ஏற்பட வேண்டும். அப்போது தான் சமத்துவம் - சமதர்மம் ஏற்படும். இவ்வுயரிய நிலையை நாம் அடைய வேண்டுமாயின் எம்மிடம் மனமாற்றம் வேண்டும். அம்மனமாற்றம் பொறுமை, ஈகை, சகிப்புத்தன்மை என்பதாக அமைந்தால் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கலாம்.

முன்பெல்லாம் தீபாவளிப் பண்டிகையென்றால் எங்கும் குதூகலம். புத்தாடை அணிந்து புதுமலர்கள்போல் சிறுவர்களின் ஆனந்தம். சொந்த மண்ணில் - சொந்த வீட்டில் ஆடிப்பாடி மகிழ்வு. இவையெல்லாம் இன்று கிடையாது. யுத்தத்தின் வடுக்கள் நிறைந்த இம்மண்ணில் இடப்பெயர்வுகள் நிம்மதியற்றவாழ்வு, ஏக்கப் பிரமையுடன் குடிசைகளில் வாழும் அவல நிலையால் அவர்கள் எல்லா நலன்களையும் இழந்து விட்டனர் தீபாவளி என்றவுடன் சிறுவர்கள் குழந்தைகள் புத்தாடையை ஞாபகப்படுத்த அதனைக்கொடுக்க முடியாத நிலையில் பெற்றோர்களின் மனவிம்மல் தீபங்களின் ஒளியையே மறைக்குமளவிற்கு உள்

### இலங்கையின் முறைசார்கல்வியில்

# இடைநிலைமட்ட மாணவர்கள் மத்தியில் காணப்படும் கணிதபாட தாழ் அடைவு

கணிதபாடத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பலவருட கால அனுபவமுடைய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் த.காங்கேசபிள்ளை அவர்கள் இடைநிலை மட்ட மாணவர்கள் மத்தியில் மேற்கொண்ட கணிதபாட தாழ் அடைவு பற்றிய ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.(ஆ-ர்)

4

### தனியார்கல்விநிலையங்களின் செல்வாக்கு

இன்று இருக்கும் சூழ்நிலையில் ஆரம்ப நிலையிலிருந்தே பிள்ளைகள் தனிப்போதனை எடுப்பதற்கு ஒரு வழியில் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் இளம்பராயமானது பல வழிகளில் குழப்பமடைகிறது. வசதியற்ற பெற்றோரும் இதன் மூலம் இடர்ப்பாட்டை எதிர் நோக்குகின்றனர். வகுப்பறையில் ஆசிரியர்கள் எத்துணை பாடப் புலமை வாய்ந்தவர்களாயினும், பயிற்றப்பட்டவர்களாயினும் புத்தூக்க வகுப்புகளில் கலந்து தற்போதைய கலைத்திட்டத்திற்கமைய புதிய உத்திகளை உபயோகித்து பயிற்றுவிப்பவராயினும் கூட மாணவர்களில் அநேகர் தனியார் கல்வி நிலையங்களை நாடிச்செல்வதை அவதானிக்கலாம். முக்கியமாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பதற்காக அங்கு செல்கின்றனர். இதற்கு அநேக பெற்றோர்களும் தூண்டியாக இருப்பது நோக்கற்பாலது. பாட அலகுகள் யாவற்றையும் மீண்டும் கற்பிப்பதற்கு பாடசாலையில் நேர அவகாசம் போதாது எனவும், இதனால் பாடசாலைக் கற்றல்-கற்பித்தல் மாணவர்கள் யாவருக்கும் பூரணமாக அமைந்து விடுவதில்லை எனவும், கணிதம் போன்ற சிக்கலான பாடங்களைக் கற்பதற்கு தனியார் கல்வி நிலையங்களை நாட வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது எனக் காரணம் கூறப்படுகிறது. இக்காரணம் எந்தளவிற்கு உண்மையானது என்பது ஆழ்ந்த ஆய்வுக்குரிய

மட்டுமன்றி ஏனைய நிலைகளிலுள்ள மாணவர்களும் குறிப்பாக எமது நாட்டில் ஒரு சிக்கலான நிலைமைக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றனர் எனக்கூறலாம். பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கற்றல் நிலைமைகளுக்கு போட்டியாக, அதாவது பாடசாலைப் பாடவிதானத்துக்கு ஏற்ற கற்றல்-கற்பித்தலுக்கு போட்டியாக பல தனியார் கல்வி நிலையங்கள் எங்கும் காணப்படுகின்றன. பல சமயங்களில் இந்த இருவகையான நிலையங்களும் ஒரேவகையான மாணவர்க்கு ஒரேநேரத்தில் பாடப் போதனைகளுக்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்ய வேண்டிய நிலைமைக்கு மாணவர்கள் தள்ளப்படுகின்றனர். இதனால் ஏற்படும் பக்கவிளைவுகள் ஏராளம். இவற்றோடு நாட்டின் சமூக பொருளாதார அரசியல் காரணிகளும் இணையும் போது மாணவர்களின் கற்றல் தொழிற்பாடானது முறைமையான ஒரு கட்டுப்பாட்டிற்கூடாக வழிநடத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என கல்வியியல் பேராசிரியர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளமை கல்விச்சமூகத்தின் கவனத்திற்குரிய தொன்றாகும்.

எனவே, பாடசாலைகளில் கற்பிக்கத்தவறும் பாட அலகுகளைக் கற்கவும் தாழ் அடைவைப் பெறுவோருக்கு மீட்டல் போதனைகளை அளிக்கவும் தனியார் கல்வி நிலையங்கள் பிரதானமாக உதவுகின்றன எனக் கருதப்பட்டாலும் உண்மையில் தனியார் கல்வி நிலையங்கள் தேர்வுகளில் எதிர்பார்க்கப்படும் வினாக்களிற்கு விடையளிப்பதையே முக்கிய நோக்காக

ஆசிரியர்களில் சிலரின் நிலை தற்போது தாழ்ந்துவிட்டது. உண்மையிஉ நிலைதாழ்ந்தா? அல்லது தம் நிலையை தாழ்த்திக் கொண்டனரா? என்பது தான் அடிப்படைக்கேள்வி. இதற்கு இரண்டாவது நிலையே விடையாக அமையும். வழிகாட்டவேண்டிய ஆசிரியரே வழிமாறுவதும், மாணனனை உருவாக்க வேண்டிய ஆசிரியர் தன்னை பொருளளவில் உருவாக்கத் துடிப்பதும் பொறுப்புணர்ச்சியை விட பொருளுணர்ச்சி மேலோங்கி நிற்பதுவுமே மூறகாரணங்களாகும் பாடசாலை வகுப்பறையில் பொதுக் கூட்டம் கேட்பது போல பாடம் கேட்கும் மாணவன், கேட்டது புரியாமல் அறியத்துடிக்கிறான். இதனால் தேர்வில் தேறாமல் போய்விடுமோ என்ற் அச்சும் ஆட்டுகிறது, ஆசிரியனைத் தேடி ஓடுகிறான் மாணவன் கையிலிருந்து பணம் கைமாறுகிறது. இதுதான் பிரத்தியேக

போக்கு போன்ற இன்னோரன்ன தன்மையினால் தனியார் கல்வி நிலையங்களிலும் மாணவர்கள் கற்கின்றநிலை ஏற்பட்டுள்ளது எனலாம். இனால் இக் கற்றல்-கற்பித்மலினால் மாணவர்கள் உண்தயில் நன்மையடைகின்றனர் என்பது கேள்விக்குரியதே.

### தாழ் அடைவிற்கான முக்கிய சில காரணிகள்

கணிதபாட தாழ் அடைவிற்கான காரணிகள் பலவாக இருக்கலாம். அவற்றுள் முக்கியமான சிலவற்றை நோக்குதல் இன்றியமையாததாகும்.

1) மாணவர்களின் சமூக பொருளாதார கலாச்சாரப் பின்னணி. சமூக, பொருளாதார அமைப்புகளினதும் நிலைகளினதும்மீது அடிப்படையாக்கப்பட்ட தற்போதைய கல்விமுறைகள் அதே சமூக பொருளாதார அமைப்

தம்பியப்பா காங்கேசபிள்ளை
B. Sc. Dip - in - Edu, M Phil (Edu.)
விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை

கல்வியின் உண்மை நிலை.

பாடசாலைகளிலும் தனியார் கல்விநிலையங்களிலும் கற்பிக்கும் பாட அலகுகளில் ஒருமைப்பாடின்மையும், தொடர்ச்சியின்மையும் காணப்படுவதாலும்' காலை பகல், மாலை முழுவதும் தொடர்ச்சியான கற்பித்தலுக்கு உள்ளாக்கப்படுவதாலும் களைப்புடன் வீடு திரும்பும் மாணவர்கள் எதனை மீட்பது என்று தெரியாமல் குழப்பமடைகிறார்கள். வெகுசனத்தொடர்பு சாதனங்களின் விளம்பரங்களினால் பெரிதும் ஈர்க்கப்பட்டுத் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் பாடசாலை மாணவர்கள் தாமாகவே சிந்தித்துக் கற்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள் என்று கூறினால் அது மிகையாகாது எனவே தான் கணித பாடத்தில் தாழ் அடைவு பெறுவோர் தனியார்கல்வி நிலையங்களுக்குச் சென்று கணிதம் கற்பதினால் அடைவை உயர்த்துகிறார்களா என்பதுகேள்விக்

புக்களினையும், நிலைகளையும் நிலைத்திருக்கவும், வலியுறுத்தவும், மீளாக்கவும் செய்கிறது. கற்பித்தல் வளங்களற்ற பாடசாலைகள் சக்தியற்ற சமூக பொருளாதாரப்பின்னணியைப் பிரதிபலிப்பதோடு அச் சக்தியற்ற சமூக பொருளாதார நிலையை நிலையாக வைத்திருக்கவும்செய்கிறது. இப்பாடசாலைகளில் உண்மையில் நிலவுவது மௌன கலாசாரமும் வறுமைக் கலாச்சாரமுமாகும். தேசிய கல்வி நிறுவகத்தின் ஆராய்ச்சி பிரிவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மட்டமாணவரின் கணித பாட அடைவுபற்றிய ஆய்வின்படி வளங்களற்ற பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் மிகக் கூடுதலானோர் தாழ் அடைவைப் பெறுகின்றனர் எனக் காணப்பட்டுள்ளது.

இந்நிலைக்கு பங்களிப்புச்

மறைக்குமளவிற்கு உள்ளது. வசதியாக வளமாக நிலபுலங்களுடன் வாழ்ந்த மக்கள் இன்று இருக்க உறங்க வசதியின்றி குடிசைகளிலும் பொதுக்கட்டடங்களிலும் தங்கி வாழும் நிலையே காணப்படுகிறது.

